# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி-620 024.

முனைவர் க. கோபிநாத் — தொலைபேசி : 0431-2407092

பதிவாளர் — தொலைப்படி: 0431-2407045


கடித எண்.5280/D7/2020, நாள்: 06 .11.2020

பெறுநர்

முதல்வர்

பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற

அனைத்துக் கல்லூரிகள் / ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள்

அய்யா / அம்மையீர்,

பொருள்: 2020 - 2021 - ஆம் கல்வியாண்டு - இளநிலை மற்றும் முதுநிலை - மாணவ மாணவிகள் சேர்க்கைக்கான தேதி நீட்டிப்பு - தொடர்பாக.

பார்வை:
1. 5280/E1/Admiss – 2020-21/2020. Dt.31.07.2020
2. 5280/D7/2020. நாள்: 14.10.2020
3. 5280/D7/2020. நாள்: 29.10.2020
4. 06.11.2020 துணைவேந்தர் அவர்களின் ஆணை.

*****

பார்வை (2) மற்றும் (3) -ல் காணும் சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக, 2020-2021-ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவு மாணவ மாணவிகளுக்கு சேர்க்கைக்கான கடைசி தேதி கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்க பணிக்கப்பட்டுள்ளேன்.

இளநிலை - 31.10.2020 லிருந்து 15.11.2020 வரை

முதுநிலை - 09.11.2020 லிருந்து 15.11.2020 வரை

பல்கலைக்கழக விதிகளின்படி, ஒவ்வொரு பருவத்திற்கும் குறைந்தது கல்லூரி 90 வேலை நாட்கள் நடைபெற்று இருக்கவேண்டும். மேலும் தங்கள் கல்லூரியில் / ஒப்புதல் பெற்ற நிறுவனத்தில் சேர்க்கை பெற்ற மாணவ / மாணவிகளின் விவரங்கள் (ABCD படிவத்தில்) மற்றும் பல்கலைக்கழக கட்டணம் ஆகியவற்றை மாணவர் சேர்க்கை முடிவுற்று ஒரு மாதத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் மற்றும் கட்டணங்கள் பெறப்பட்ட விவரங்கள் அனைத்தும் இளநிலை மற்றும் முதுநிலை 17.12.2020-ம் தேதிக்குள் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப் பெற்றால்தான் அம்மாணவ / மாணவியர்களின் பல்கலைக்கழகத் தேர்வு அட்டவணை தொடர்பான பணிகள் உரிய நேரத்தில் தொடங்க ஏதுவாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

பதிவாளர் 3/13

நகல்: தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024.